**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 04.03.2026

அசல் வழக்கு எண். 98/2008

வா.சா. 1 – சங்கர், த/பெ. கிருஷ்டப்ப நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வீடு அரசாங்கம் கட்டிக் கொடுக்கக் கூடாது என்று ஒரு வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் மின் இணைப்பு கொடுக்கக் கூடாது என்று அந்த வழக்கில் கேட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் வேலாயுதம் பெயரில் பட்டா யூ.டி.ஆரில் மாறியுள்ளது. அந்த சொத்தை வேலாயுதம் அவரது மகள் இரண்டாம் பிரதிவாதி பச்சையம்மாள் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு கிழக்கு மேற்கு யாருடைய இடம் என்றால் எங்களுடைய இடம்தான். வடக்கில் சொத்து விவரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு ஆகியவை முனுசாமி இடம் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. முனுசாமி என்பவரது சொத்துக்கள் தத்தெடுத்த மகன் வேலாயுதம் என்பவருக்கு சென்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. முனுசாமி நாயக்கர் சொத்து குறித்து உங்களுக்கு எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு கூர் சீட்டு முன்னிலைக்கு வீட்டுமனை ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. உங்கள் பெயரில் வீட்டுமனைக்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. உங்கள் தாயார் பாப்பாத்தி அம்மாள் பெயரில் பட்டா கொடுத்துள்ளார் என்றால் இல்லை. பொன்னுரங்கம் பெயரில் வீட்டுமனை பட்டா கொடுத்தார்களா என்றால் இல்லை. சீனிவாசன் பெயரில் பட்டா கொடுத்தார்களா என்றால்

இல்லை. அவர்கள் பெயரில் கூட்டாக பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எந்த சர்வே நம்பருக்கு கூட்டு பட்டா கொடுத்தார்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து உங்களுடையது இல்லை என்பதால் பட்டா கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. தாவா சொத்து வேலாயுதம் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அந்த இடத்தில் பச்சையம்மாள் காம்பவுண்டு வால் போட்டார்கள் என்றால் தற்போது போட்டார்கள். அதில் ஒரு கொட்டகை இருக்கிறது என்றால் சரிதான். அதில் ஒரு மின் இணைப்பு இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்து 1986 ஆம் ஆண்டு கூர் சீட்டில் உங்களுக்கு ஒதுக்கவில்லை என்றால் சரி இல்லை. 1976 சின்னப்ப நாயக்கர் அவரது சகோதரர்களும் கூர் சீட்டு எழுதிக் கொண்டார்கள் என்றால் தெரியாது. வீட்டுமனை 1976 கூர் சீட்டில் சின்னப்ப நாயக்கருக்கு ஒதுக்கவில்லை என்றால் தெரியாது. வீட்டுமனை முனுசாமி நாயக்கர் சொத்து என்றால் சின்னப்ப நாயக்கர் மனை ஆகும். முனுசாமி நாயக்கர் அனுபவித்து வந்தார் என்றால் சரியில்லை சின்னப்ப நாயக்கர் அனுபவித்து வந்தார். உங்கள் சொத்தாக இருந்தால் பட்டா கொடுக்கும் போது ஆட்சேபனை செய்திருப்பீர்கள் என்றால் தெரியாது. சர்வே எண் 293/1இல் 44 சென்ட் சர்வே எண் 294இல் 63 சென்ட் வாதிகள் பொன்னுரங்கம் மற்றும் சீனிவாசன் ஆகியோர் வேலாயுதத்திற்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் தெரியாது. அது பதிவு பெறாத கிரைய ஆவணம் என்றால் தெரியாது. சர்வே எண் 293/1இல் 44 சென்ட் சர்வே எண் 294இல் 63 சென்ட் என்ற சொத்தினை வேலாயுதம் என்பவர் ரகுராமன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் செய்திருக்கலாம். சொத்தை விற்பனை செய்து

விட்டதாக சொல்கிறீர்கள் வாங்கியவர்கள் தான் அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான். சின்னப்ப நாயக்கர், வேலாயுதமும் தனித்தனியாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் வேலாயுதம் வைத்திருந்தார் என்று கூறுவது தவறு என்றால் சரியில்லை. சின்னப்ப நாயக்கர் இறந்த பிறகு இரண்டாவது மனைவி காலமானார் என்றால் சரிதான். அவர்களது பெயர் ஜெயலட்சுமி என்றால் சரிதான் அவர்களும் தனியாக தான் வசித்து வந்தார்கள் என்றால் தெரியும் வேலாயுதத்துடன் வசித்து வரவில்லை என்றால் சரிதான். 1986 கூர் சீட்டு முன்னிலைக்கு அவரவர்கள் பாகத்தை தனித்தனியாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூர் சீட்டில் வேலாயுதத்திற்கு பங்கு எதுவும் கிடையாது நீங்களாக ஏற்படுத்திக் கொண்டது என்றால் கூர் சீட்டு தயார் செய்தது வேலாயுதம் தான். ரங்கநாதனுக்கு நீங்கள் ஒரு கிரயம் எழுதி கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த சொத்து குறித்து பிறகு நீங்கள் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கை நீங்கள் நடத்தவில்லை என்றால் சரிதான். அந்தக் கிரையம் சரி என்பதால் வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் உங்களிடம் இருக்கிறது என்றால் இல்லை அதனை தாக்கல் செய்தால் உங்களுக்கு வழக்கு பாதகம் ஆகிவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. ஏழுமலைக்கு கூர் சீட்டில் பாகம் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான் அதனை அவர் விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். கூர் சீட்டில் கோவிந்தனுக்கும் பாகம் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான் அவரும் அதனை விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். கூர் சீட்டு அனைத்து தரப்பினரும் சம்மதித்து

**எழுதினார்கள் என்றால் சரியில்லை. கூர் சீட்டு 1976 ஆம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கில் கேட்ட பரிகாரங்கள் உங்களுக்கு வழங்க தக்கது அல்ல என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram